பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை 06.04.2025 | அதிர்வு 246

## யாழ். பல்கலை புதுமுக மாணவன் மீது தாக்குதல்:

## சிரேஷ்ட மாணவர்கள் இருவர் விளக்கமறியலில்

(விரிவான செய்தி 8 ஆம் பக்கம்)

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வெற்றிகரமாக நிறைவடைந்தது மோடியின் இலங்கை விஜயம்!

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் அழைப்பின் பேரில் இலங் கைக்கான அரச விஜயத்தை மேற் கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று முற்பகல் அனுராதபுரம் விமானப்படைத் தளத்தில் இருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

05

# மஹவ - ஓமந்தை ரயில் வீதி அநுர - மோடி இணைந்து திறப்பு



(விரிவான செய்தி 4 ஆம் பக்கம்)



# வரலாற்றுச் சிறப்புமிக்க அனுராதபுரத்தில் இந்தியப் பிரதமருக்கு அமோக வரவேற்பு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு அரச பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி, இன்று முற்பகல் அனுராதபுரத்துக்குச் சென்றார்.

வட மத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் இந்தியப் பிரதமருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

பின்னர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை விமானப் படையின் மரியாதையையும் ஏற்றுக்கொண்டார்.













# ஜயஸ்ரீ மகா போதியைத் தரிசித்த மோடி



இலங்கைக்கு மூன்று நாள் அரச பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இன்று முற்பகல் அநுராதபுரத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஜயஸ்ரீமகா போதியில் வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றனர்.

உடமலுவவை வந்தடைந்த இந்தியப் பிரதமர், அட்டமஸ்தானாதிபதி நுவரகலாவியே பிரதான சங்கநாயக்க வண, பல்லேகம ஹேமரதன நாயக்க தேரரைச் சந்தித்து, உரையாடலில் ஈடுபட்டார்.

தான் பிறந்த குஜராத் பிரதேசத்தில் 1960களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது புத்தரின் நினைவுச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அந்த நினைவுச்சின்னங்களை இலங்கையில் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவது குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

புத்த கயாவை ஆன்மீக நகரமாகப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அட்டமஸ்தானாதிபதி தேரர் விடுத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் அது தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் “நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு” என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அரச பயணத்திற்கு இணையாக இந்தத் தரிசிப்பு இடம்பெற்றது.

அட்டமஸ்தானாதிபதி தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர், பிரித் பாராயணம் செய்து இந்தியப் பிரதமருக்கு ஆசிர்வதித்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த சிறப்பு விருந்தினர்கள் புத்தகத்தில் பிரதமர் நரேந்திர மோடி நினைவுக் குறிப்பையும் இட்டார். மேலும், இந்தியப் பிரதமர் ஜயஸ்ரீ மகா போதி வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயிலையும் திறந்து வைத்தார்.

ருவன்வெலி சேய விகாராதிபதி வண, ஈத்தலவெடுனுவேவே ஞானதிலக தேரர், உட்பட அட்டமஸ்தான விஹாரையின் விகாராதிபதி, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, வட மத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.







# மஹவ - ஓமந்தை ரயில் வீதி அநுர - மோடி இணைந்து திறப்பு

மஹவ – ஓமந்தை ரயில் வீதி மற்றும் மஹவ – அனுராதபுரம் ரயில் வீதி சமிக்ளை கட்டமைப்பு என்பவற்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரால் இன்று திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் “நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு” என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்துடன் இணைந்ததாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இந்தியப் பிரதமரும் இந்தத் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது, ஜனாதிபதி மற்றும் இந்தியப் பிரதமரால் பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு ரயில் வீதி மற்றும் சமிக்ஞை கட்டமைப்பு திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் ரயில் புறப்பட்டுச் செல்வதற்கான முதலாவது சமிக்ஞை காண்பிக்கப்பட்டது.

மஹவ – ஓமந்தை ரயில் வீதி நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் பெறுமதி 91.27 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

அதேபோல், 14.89 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட மஹவ – அனுராதபுரம் ரயில் சமிக்ஞை கட்டமைப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் பின்னர் இலங்கைக்கு அன்பளிப்பாகக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்,வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, வட மத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச ஆகியோரும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.













# மோடிக்கு அநுரவால் சிறப்பு இரவு விருந்து!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு அரச பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று சனிக்கிழமை இரவு ஜனாதிபதியினால் சிறப்பு இரவு விருந்து வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரவேற்றார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம், பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகளில் இரு நாட்டு மக்களிடையே அதிக நெருக்கம் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் என்று நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறியதாவது:

"நாங்கள் விருந்தோம்பலை விரும்பும் மக்கள், மேலும் அனைத்து விருந்தினர்களையும் நாங்கள் அன்புடன் அரவணைக்கின்றோம். பாக்கு நீரிணையைக் கடந்து செல்லும் எமது நண்பர்களை மிகவும் அன்பான இதயத்துடன் அரவணைப்போம் என்பதை நான் நினைவுகூர்கின்றேன்.

சிறிய ஆனால் அன்பான இதயம் கொண்ட மக்களால் நிறைந்த இந்த அற்புதமான தீவுக்கு உங்கள் நாட்டு மக்கள் மீண்டும் மீண்டும் வருவதைப் பார்ப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

நாம் எப்போதும் நம் நண்பர்களிடம் கூறும் ஒரு விடயம், "மீண்டும் வாருங்கள்" என்பதுதான். எமது இதயங்கள் உங்களை வரவேற்கத் தயாராக உள்ளன.

பிரதமர் நரேந்திர மோடியின் சிறந்த ஆரோக்கியத்திற்கும், இந்திய மக்களின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும், செழிப்பிற்கும், நமது இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து வளர்ந்து வரும் ஒத்துழைப்பு மற்றும் நட்பு என்ற உன்னத விருப்பங்களுக்காக நாம் ஒரே நோக்கத்துடனும் அன்பான இதயங்களுடனும் ஆசிர்வதிப்போம்." – என்றார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட அமைச்சர்கள், இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட இராஜதந்திரிகள் குழுவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

---

## வெற்றிகரமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு" என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக்கு அரச பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்த நான்காவது தடவை இதுவாகும் என்பதுடன், இந்த அரச விஜயத்தால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார, கலாசார மற்றும் வரலாற்று உறவுகளை மேலும் வலுப்படுத்தி, இரு நாடுகளுக்கிடையிலான பன்முக ஒத்துழைப்புகளும் பலப்படுத்திக்கொள்ளப்பட்டன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், அயலவருக்கு முதலிடம் என்ற இந்திய வெளிவிவகாரக் கொள்கை மற்றும் மஹாசாகர் நோக்குக்கு அமைவாக, இராஜதந்திர விவகாரங்களில் இலங்கைக்கு சிறப்பிடம் உண்டு என்பதையும் இந்தியப் பிரதமரின் விஜயத்தால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த விஜயம் பல முக்கியமான பல்வேறு எதிர்கால ஒத்துழைப்புகளுக்கு உடன்பாடுகளை எட்டக்கூடியதாக அமைந்ததுடன், இந்த ஒத்துழைப்புகளின் வெற்றிகரமான பலன்களை இலங்கை மக்கள் விரைவில் அனுபவிக்க முடியும். மேலும், மக்களுக்கான நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் அரசின் பயணத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் முக்கிய மைல்கல்லாக அமையும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இந்திய அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்த விஜயத்தில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான குழுவினர், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து தமிழர் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் ஓர் ஒப்பந்தமா?

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இம்முறை இலங்கைக்கு வந்திருந்த போது இலங்கை - இந்தியா இடையே ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன என்று செய்திகள் வெளியாகின.

இலங்கையும் இந்தியாவும் காலம் காலமாக இப்படிப் பல ஒப்பந்தங்களைச் செய்தாலும் அவற்றில் முக்கியமான ஒப்பந்தங்கள் ஒரு சில தாம்.

1964இல் செய்யப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும், 1987இல் செய்யப்பட்ட ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தமும் அவற்றில் குறிப்பிடத்தக்க இரண்டு.

இரண்டுமே யாருக்காக செய்யப்பட்டனவோ, அவை தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த அத்தரப்புகள் அந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் விசனம் தெரிவிக்கும் நிலைதான் இன்றும் நீடிக்கிறது.

இலங்கை அரசினால் ஒரே நாளில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் சுமார் ஒன்பது லட்சத்து 75 ஆயிரம் மலையகத் தமிழர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள். அதில் ஐந்து லட்சத்தி 25 ஆயிரம் பேரைத்தான் ஏற்றுக் கொள்வதாக சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா இணங்கி அடிபணிந்தமையால் இன்று மலையகத்தமிழர்கள் இலங்கையில் நலிவுற்ற சமூகமாக இருக்கிறார்கள் என்பது தமிழர் தரப்பின் ஆதங்கம்.

அதேபோல 1987 இல் ஜெயவர்த்தன அரசோடு ராஜீவ் காந்தியின் இந்திய அரசு செய்து கொண்ட ஒப்பந்தம் காரணமாக தமிழர்களின் விடுதலைப் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டது. அவர்களின் போராட்டத்தின் விளைவாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் நடுவீதிக்கு இழுத்து வரப்பட்டு, அநாதரவாக விடப்படும் நிலைமை இந்த ஒப்பந்தத்தினால் ஏற்பட்டது.


இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட மலையகத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் அந்த ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட இந்தியா குறித்து மிகுந்த மனவிரக்தி - விசனம் - சீற்றத்தில் - இருக்கிறார்கள் என்பது யதார்த்த உண்மை.

இப்போது, நேற்று கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் மலையகத் தமிழ்த் தலைவர்களைச் சந்தித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மலையகத் தமிழர்கள் தொடர்பாக சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் போல இன்னொரு ஒப்பந்தத்தைச் செய்வது குறித்து தம்பாட்டில் கோடி காட்டி இருக்கிறார் எனத் தெரிகிறது. அது குறித்து சந்திப்பில் பங்கு பற்றிய மலையகத் தமிழ்த் தலைவர்களுக்கு தெளிவான விளக்கம் இருக்கவில்லை.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் போல, ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் போல, இன்னொரு ஒப்பந்தத்தை செய்து, முன்னையவற்றை போல அதனையும் நடுவீதியில் விட்டு, மலையகத் தமிழர்களை இன்னொரு தடவை இந்தியா அங்கலாய்க்கச் செய்யப் போகின்றதா என்ற கேள்வியே அந்தத் தலைவர்கள் மத்தியில் மிஞ்சி நிற்பதாக அறிய முடிகிறது.

இந்தியாவின் நகர்வுகள், கொழும்பையும் திருப்திப்படுத்தவில்லை, அதனுடன் முட்டி மோதி நிற்கும் மலையகத் தமிழர்கள் மற்றும் இலங்கை தமிழர்களையும் திருப்திப்படுத்தவில்லை என்பதுதான் உண்மை.

குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கும் தந்திரம் எல்லாச் சமயத்திலும் வெற்றி பெறும் என்பது சாத்திய மல்ல.



# வீதி விபத்துக்களில் மூவர் பரிதாபப் பலி

(க.மகாதேவன்)

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 5 வயது சிறுமி மற்றும் ஒரு பெண் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

மஹாபாகே, மெல்சிறிபுர மற்றும் பல்லேகலே பொலிஸ் பிரிவுகளில் நேற்று இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

மஹாபாகே பொலிஸ் பிரிவின் வெலிசர பகுதியில், வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் மீது கார் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மூன்று சிறுவர்களில் ஒருவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். ஏனைய இரண்டு சிறுவர்களும் பலத்த காயமடைந்து ராகம வைத்தியசாலையில் உள்நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவர் வெலிசர, ராகம பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுமியாவார்.

விபத்துக்குப் பிறகு, காரின் ஓட்டுநர் காரை அங்கேயே விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில், சாரதியைக் கைது செய்வதற்காக மஹாபாகே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கண்டி – பதியதலாவ வீதியில் பலகொல்ல செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அருகில் வீதியைக் கடக்க முற்பட்ட பெண் பாதசாரி மீது காரொன்று மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் அந்தப் பெண் பலத்த காயமடைந்து பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கெங்கல்ல பகுதியைச் சேர்ந்த 76 வயது டைய பெண் ஆவார்.

இதேவேளை, தம்புள்ளை – குருநாகல் வீதியில் கொஸ்கெலே பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 76 வயதுடைய வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

# வீடுடைப்பு மற்றும் மாடுகளை களவாடிய இருவர் பெரிய நீலாவணை கைதாகினர்!

(பாறுக் ஷிஹான்)

வீடு உடைப்பு மற்றும் மாடுகள் திருட்டு உட்பட வர்த்தக நிலையங்களில் சூட்சுமமாக களவாடி வந்த கொள்ளையர் குழுவின் இரு சந்தேக நபர்களை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை பாண்டிருப்பு உள்ளிட்ட புற நகர் பகுதிகளில் வீடுகள் உடைக்கப்பட்டும் மாடுகள் உட்பட பெறுமதியான பல பொருள்கள் களவாடிச் செல்லப்பட்டிருந்தன.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய வெள்ளிக்கிழமை (4) அதிகாலை குறித்த கொள்ளை குழுவில் உள்ள 2 சந்தேக நபர்கள் சிசிடிவி காணொளி மற்றும் பொது மக்களின் தகவல்களின் அடிப்படையிலும் பெரிய நீலாவணை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்பதுடன் சுமார் 25 வயது முதல் 28 வயது மதிக்கத்தக்கவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய கொள்ளைச் குழுவில் உள்ள மூவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பெரிய நீலாவணை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து களவாடி செல்லப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏனைய களவாடப்பட்ட பல பொருள்களும் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார் வழிநடத்தலில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலை புதுமுக மாணவன் மீது தாக்குதல்: சிரேஷ்ட மாணவர்கள் இருவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டு சித்திரவதை புரிந்த குற்றச்சாட்டில் சிரேஷ்ட மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி பல்கலைக்கழக விடுதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு நடந்து வந்து கொண்டிருந்த புதுமுக மாணவனை விரிவுரைக்குச்செல்லவிடாமல்தடுத்தசிரேஷ்டமாணவர்கள் சிலர், அவரை வலுக்கட்டாயமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றி, தனியார் மாணவ விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

அங்கு வைத்து அம்மாணவனையும் வேறு சில புதுமுக மாணவர்களையும் கடுமையான சித்திரவதைகளுக்குள்ளாக்கிய சிரேஷ்ட மாணவர்கள், தலைக்கவசத்தாலும் தாக்கியிருந்தனர்.

தாக்குதல் மற்றும் சித்திரவதைக்கு உள்ளான நாத்தாண்டிய பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒரு காது கேட்கும் திறனை இழந்திருந்தார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மாணவனால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இரண்டு சிரேஷ்ட மாணவர்களைக் கைது செய்து விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியதை அடுத்து மேற்படி இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மாணவர்கள் தொடர்பிலும் தாம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும், தலைமறைவாகவுள்ள அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.








# மட்டக்களப்பில் நீண்ட காலமாக நிலவிய புதூர் வீதிக்கு தீர்வாகப் புதிய வீதி அமைப்பு

## விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்புக்குத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு நேற்று சனிக்கிழமை (05) மட்டு விமான நிலையம் மற்றும் ரயில் நிலையங்களுக்கு விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு நகரில் இருந்து புதூர் பகுதியை இணைக்கும் வீதிக்குப் பதிலாக விமானப்படையின் காணியின் ஊடாக புதிய வீதியை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, மட்டக்களப்பு விமானப்படை கட்டளை அதிகாரி சரத் பண்டார, தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர் திலகநாதன், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட தலைவி வனிதா செல்லப் பெருமாள் உள்ளிட்டோருடன் மட்டக்களப்பு விமான நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் மட்டக்களப்பு நகருடன் புதூர் பகுதியை இணைக்கும் பாதை தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்டு களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து நீண்டகாலமாக நிலவிவந்து மட்டக்களப்பு புதூரை ,ணைக்கும் வீதிப் பிரச்சினைக்கு தீர்வாக விமானப்படையின் காணி ஊடாக புதிய வீதியை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளார் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை கிழக்கு மாகாணத்துக்கு வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை கொண்டு மக்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு ரயில் நிலையத்தைப் பார்வையிட்ட பிரதியமைச்சர் ரயில் நிலையத்தில் தற்போதைய நிலை தொடர்பில் ஆராய்ந்ததுடன், ,ங்கு நிலவும் குறைபாடுகளை மிக விரைவில் தீர்த்து வைப்பதாக வாக்குறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்கான உணவு வழங்கல் கலந்துரையாடல்!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு உட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்கான உணவு வழங்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் சாய்ந்தமருது உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ. மு.ஆபிக்கா தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜரீன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வர்த் தக நிலைய உரிமையாளர்கள் பங்கு பற்றினர்.



எதிர்வரும் காலங்களில் போசாக் கான உணவுகளுக்கான வவுசர்கள் வழங்கப்படும் பட்சத்தில் அரசால் அங் கீகரிக்கப்பட்டசுற்றுநிருபத்துக்குஅமைய சுகாதாரமான உணவுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இவ்வாறு வழங்கப் படும் உணவுகள் சுகாதாரத்துக்கு கேடான வகையில் அமையப்பெறும் நிலையில் காணப்படுமாயின் சட்ட ரீதி யான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்றும்இதன் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.




# ஆங்கில மொழித் தினப் போட்டியில் கிண்ணியா மாணவி இரண்டாம் இடம்

(எச். எம். ஹலால்தீன்)

தேசிய ரீதியில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான ஆங்கில மொழித் தினப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி எம்.ஏ. பாத்திமா சஹ்லா, கல்வி அமைச்சிடம் இதற்கான விருதைப் பெற்றுக் கொண்டார். தனது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவருடைய கடின உழைப்பு, ஒழுக்கம் மற்றும் திறமை ஆகியவை இந்த வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள்ளன.

இந்த வெற்றிக்கு வழிவகுத்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் நன்றியைத் தெரிவித்துள்ளார்.





# தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பதவிக்கு மூவரது பெயர்கள் பேரவையால் பரிந்துரை!

(நூருல் ஹுதா உமர் )

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விஷேட பேரவை ஒன்றுகூடல் பேராசிரியர் எம். எம். பாஸில் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக கூட்டமண்டபத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03 - 2023 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கோரப் பட்டுள்ளத்தான் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரைத் தெரிவு செய்தனர்.

இதன் அடிப்படையில் முதலாவதாகப் பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன் இரண்டாவதாக பேராசிரியர் ஏ.எம். றஸ்மி மூன்றாவதாக கலாநிதி யூ.எல். செயினுடீன் ஆகியோர் அதிக புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது பதவிக் காலம் கடந்த 2024.08.09 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்று நிருபத்துக்கு அமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த 2024.02.08 ஆம் திகதி விடுத்திருந்தார்.

அதன் அடிப்படையில் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழுபேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் இருந்து அப்போதைய பேரவை பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப் ஆகியோரை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருந்தது. இருந்தபோதும் அரசியல் மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் நியமனங் கள் வழங்கப்படாது பதில் உபவேந்தராக கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் நிய மிக்கப்பட்டார்.

பின்னர் மீண்டும் குறித்த வெற்றி டத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பைக் கடந்த பெப்ரவரி 06 ஆம் திகதி விடுத்திருந்தார். அதற்கமைய மார்ச் 06 ஆம் திகதி ஒன்பது பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதன் அடிப்படையில், கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எம்.ஐ.எஸ். சபீனா, பேராசிரியர் எஸ்.எம். ஜு னைடீன், பேராசிரியர் எப். ஹன ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். முஸ ாதிக், பேராசிரியர் ஏ.ஜௌபர் மற்றும் கலாநிதி யூ.எல். செயினுடீன் உள்ளிட்ட ஒன்பதுபேர் விண்ணப்பித்திருந்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பதவிக்கு இந்த முறையும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரி வுரையாளர்கள் மாத்திரமே விண்ணப்பித் திருந்தனர். பல்கலைக்கழகத்துக்கு வெளியேயிருந்து எவரும் விண்ணப் பிக்கவில்லை. இந்த நிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ள மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார்.



# கிழக்கு சுகாதாரத் துறையினருக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

மாகாண சுகாதாரத் துறை மற்றும் பிராந்திய சுகாதார அதிகாரிகள் அலுவலகங்களின் பிரதானிகள் மற்றும் அதிகாரிகளுக்கான கொள்முதல் குறித்த விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று வியாழக்கிழமை (3) நடைபெற்றது.

இந்த செயலமர்வு திருகோணமலை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.



கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர இதனை நடத்தி வைத்தார்.

கிழக்கு மாகாண சுகாதார துறைக்கு பொருள்களை அல்லது சேவைகளை வழங்குதல் அல்லது பெறுதல் குறித்த விடயங்கள் குறித்து இங்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க மற்றும் மாகாண சுகாதார பணியக மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளர்கள் மற்றும் சக அதிகாரிகள் பங்கேற்றனர்.








### ஹரீஸின் பி - 100 திட்டத்தில்

# ஒளியூட்டித் திருத்தியமைக்கப்பட்ட மைதானம் வீரர்களிடம் கையளிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் பி- 100 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் ஒரு கோடி அறுபது லட்சம் ரூபா செலவில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்துக்கு நிரந்தரமாக மின்னொளி பொருத்தப்பட்டு வியாழக்கிழமை (03) உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய விளையாட்டு கழகங்களதும், வீரர்களதும் நீண்ட கால தேவையாக இருந்து வந்த மின்னொளி வசதியுடன் கூடிய விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மின்னொளி மைதானம் உத்தியோக பூர்வமாக வீரர்களிடம் கையளித்து வைக்கும் நிகழ்வை முன்னிட்டு மருதம் விளையாட்டுக் கழகம் மற்றும் கல்பனா விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து சினேகபூர்வ உதைப்பந்தாட்ட போட்டி ஒன்றை நடத்தினர்.



இந்தப் போட்டியில் ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டு கழக உதைப்பந்து அணியினரும் மருதமுனை தெரிவு அணியினரும் மோதினர். இப்போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்தது.

இந்த போட்டிக்கு பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும், விளையாட்டுத் துறை முன்னாள் பிரதியமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கலந்து கொண்டார். மேலும் இந்தப் போட்டியில் கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம் றக்கீப், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் வை.கே. ரகுமான், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சமட் ஹமீட், எம்.எம் முஸ்தபா, அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் செயலாளர் ஏ.எம் இப்றாஹிம், மருதம் விளையாட்டு கழகத்தின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.சமீம், பொறியியலாளர் எம்.பஸீல், மருதம் விளையாட்டுக் கழக செயலாளர் அசன் மனாஸ், பிரிலியண்ட் விளையாட்டுக் கழகத் தலைவர் எம்.எஸ். எம் பழீல், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# நாபீர் பௌண்டேசன் ஸ்தாபகரால் பள்ளிவாசலுக்கு நிதியுதவி வழங்கல்

(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது தக்வா ஜும்ஆ பள்ளிவாசலுக்கான நிதியை பள்ளிவாசலின் நிர்வாகத்தினரிடம் நாபீர் பௌண்டேசன் தலைவர் அல்-ஹாஜ் கலாநிதி உதுமான்கண்டு நாபீரால் வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சாய்ந்தமருது தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை இவர் வழங்கினார்.

அண்மையில் குறித்த பள்ளிவாசலுக்கு விஜயம் செய்திருந்த பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீர் நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று அதற்கான உதவியை விரைவில் செய்வதாக வழங்கிய வாக்குறுதிக்கமைய இந்த நிதியுதவிக்கான காசோலையை வழங்கியுள்ளார்.





# மனித உரிமை மீறலுக்கான பிரித்தானியா தடை: நீதி கிடைக்காத போர்க்குற்ற விசாரணை!

● நவீனன்

(தமிழர்களின் உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் மீது பிரித்தானியா அரசின் தடையானது, சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசை விசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலுவடையச் செய்து வருகிறது.)

ஈழத் தமிழர்களுக்கு எதிரான போரின் போது கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ் பிரயோகங்கள் காரணமாக அதற்கு பொறுப்பானவர்கள் மீது பிரித்தானியா அரசு அண்மையில் தடை விதித்துள்ளது.

ஈழத்தில் 2009 போரின் இறுதிக் கட்டத்தில், இலங்கை ராணுவம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்காக சர்வதேச போர்க்குற்ற விசாரணை கோரப்பட்டது. ஆனால் இதுவரை இலங்கை அரசு இதுவரை முழுமையான பொறுப்புக்கூறலை ஏற்க மறுத்து வருகிறது.

இதுவரையில் ஈழத் தமிழர்களின் மேலான போர்க் குற்றங்களுக்கு எவரும் விசாரிக்கப்படவும் இல்லை, தண்டிக்கப்படவும் இல்லை என்பதே உண்மை. இந்த வேளையில் மனித உரிமை மீறல்கள் அதற்கு பொறுப்பானவர்கள் மீது பிரித்தானியா அரசின் தடையானது சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசை விசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுவடையச் செய்து வருகிறது.

**பிரித்தானியா அரசின் தடை**

இந்த வேளையில் போர்க் குற்றவாளிகளான இலங்கை ஆயுதப்படைகளின் முன்னாள் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, இலங்கை ராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜெயசூர்யா, மற்றும் கருணா அம்மான் ஆகியோர் மீது தடை விதிப்பதாக பிரித்தானியா வெளியுறவு அலுவலகம் அறிவித்துள்ளது.

தமிழர்களுக்கு எதிரான போரின் போது கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் காரணமாக அதற்கு பொறுப்பான இவர்கள் மீது பிரித்தானியா தடை விதித்துள்ளது.

ஈழப் போரின் போது செய்யப்பட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூறலைக் கோருவதையும், தண்டனையில் இருந்து விலக்கு அளிக்கும் கலாச்சாரத்தைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேசத்துடன் இணைந்து பணியாற்ற பிரித்தானியா உறுதிபூண்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் பயணத்தடை மற்றும் சொத்து முடக்கம் ஆகிய நடவடிக்கைகள், இந்த தடையில் அடங்கியுள்ளன.

**நீதி கிடைக்காத**
**போர்க்குற்ற விசாரணை**

இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை மூலம் ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட, 30 – 1 மற்றும் 40 – 1 தீர்மானங்களில் இருந்து விலகுவதாக, 2019 இல் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.

மேலும், 2015 ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் மனித உரிமை பேரவையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு, அப்போதைய இலங்கை அரசு உடன்பட்டது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல் என ராஜபக்ஷ தெரிவித்தார்.

**ஐ.நா.மனித உரிமைகள் சபை**

ஆனால் அவற்றில் இருந்து விலகியதாக இலங்கை அறிவித்துள்ளதால், போர்க் குற்றங்கள் தொடர்பான நீதி விசாரணை நடக்குமா என்ற கேள்வி இலங்கைத் தமிழர்களிடத்தில் எழுந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், 47 நாடுகளால் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இருந்து இலங்கை அரசு விலகியதால் அந்த நாடுகள் இலங்கையைக் கண்டித்தன.

அத்துடன் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகள் மீதான அழுத்தங்கள் அதிகரிக்கவும் வேண்டின.

தமிழர்களுக்கு நீதி கிடைக்க, ஐ.நா. மீது மட்டுமே தங்களது இறுதி நம்பிக்கையை வைத்துள்ளனர் இலங்கைத் தமிழர்கள். அத்துடன் ஐ.நா. நீதியை பெற்றுத் தர வேண்டும் என்பதே, உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து தவிக்கும் இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

**30 ஆண்டு காலப் போரும்**
**16 ஆண்டு நீதி மறுப்பும்**

இலங்’கை மேற்கொண்ட இனப்படுகொலை போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 30

தொடர்ச்சி▼










# மனித உரிமை மீறலுக்கான பிரித்தானியா தடை: நீதி கிடைக்காத போர்க்குற்ற விசாரணை!

**தொடர்ச்சி▲**

ஆண்டுகால மோதலால் அழிக்கப்பட்ட நாட்டின் சில பகுதிகளில் அமைதியின் சாயல் அரிதாக திரும்பியிருந்தாலும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்பதே உண்மை.

பல ஆண்டுகளாக, ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் போரின் போது நடந்த போர்க்குற்றங்களை சிரத்தையுடன் ஆவணப் படுத்தியுள்ளன. அரச படைகளால் நடத்தப்பட்ட அட்டு ழியங்கள் மீது ஐ.நாவின் கவனம் முக்கியமாக இருந்தது.

ஆனால் இலங்கை அரசுக்கு ஆதரவான நாடுகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த போர்க் குற் றங்களுக்கு உடந்தையாக இருந்திருக்கலாம் என்பது பற்றி அதிக கவனம் செலுத்தப்படவில்லை. ஆயினும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்பது நீண்டு தொடரும் வரலாற்றுத் துயராகும்.

**பிரித்தானியா அரசின் உறுதி**

ஈழத்தில் உள்நாட்டுப் போரின் போது நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்புக் கூறலைக் கோருவது உட்பட, அவை இன்றும் சமூகங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இது குறித்து கூறிய பிரித்தானிய காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு விவகாரங்களுக்கான வெளியுறவுச் செயலாளர் டேவிட் லாமி, இலங்கையில் மனித உரி மைகளுக்கு பிரித்தானியா அரசு உறுதி பூண்டுள்ளது.

போர்க் குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டனையில் இருந்து விலக்கு அளிக்கப்பட மாட்டார்கள் என்பதை நான் உறுதியளித்தேன்.

கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறப்படுவதை இந்த முடிவு உறுதி செய்கிறது.

சமூகங்கள் ஒன்றாக முன்னேற, கடந்த கால தவறுகளை ஒப்புக்கொள்வதும், பொறுப்புக் கூறுவதும் அவசியம், இன்று அறிமுகப்படுத்தப்பட்ட தடைகள் பட்டியல்கள் இதை ஆதரிக்கும். இலங்கையின் அனைத்து சமூகங்களும் வளர்ந்து செழிக்க முடியும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.



# சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு மருத்துவ தளபாடங்கள் கையளிப்பு

**(நூருல் ஹுதா உமர்)**

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் விஜயம் செய்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸ தீன், அந்த வைத்தியசாலையின் உயர் சார்பு பிரிவுக்குச் சென்று பார்வையிட்டார்.

இதன்போது குறித்த பிரிவில் பணியாற்றும் உத்தியோகத் தர்கள் ஒரு சில மருத்துவ தளபாடங்களை தந்துதவுமாறு பிராந்திய பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்தனர். மிகவும் அவசரத் தேவையாக உள்ள விடயங்களை உடனடியாக நிவர்த்தி செய்து தருவதாக பணிப்பாளர் இதன்போது உறுதியளித்தார்.

அதற்கமைவாக பிராந்திய பணிப்பாளர் அவர்களின் துரித நடவடிக்கையின் பயனாக மருத்துவ தளபாடங்கள் குறித்த தினமே சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டன. அதனை அந்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பீ.பிரபாசங்கரிடம் கையளித் துள்ளமை குறிப்பிடத்தக்கது



# வக்பு சட்ட மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் கொம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறிக்கும் வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை திரும்பப்பெற வலியுறுத்தி எதிர்வரும் 9 ஆம் திகதி தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அக்கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்ட அறிக்கை,

வேற்றுமையில் ஒற்றுமை பேணும் மரபையும், மதச்சார்பற்ற பண்புகளையும் அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு சட்டத்தை சிறுமைப்படுத்தி அழித்தொழித்துவிட்டு, நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை நிராகரித்து பெரும்பான்மை மத அடிப்படை வாதத்தின் அச்சில் நாட்டை 'இந்து ராஷ்டிரமாக' கட்டமைக்கும் முயற்சிகளை ஆர்எஸ்எஸ் தீவிரப்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக முஸ்லிம் மக்களின் சமூக சொத்துகளை பராமரித்து வரும் வக்பு வாரிய சட்டத்தில் திருத்தம் செய்து, முஸ்லிம் மக்களின் உரிமைகளை பறிக்கும் மசோதாவை நிறைவேற்றி, சட்டமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள், ஜனநாயக சக்திகளின் கருத்துகளையும், ஆலோசனைகளையும், திருத்தங்களையும் முற்றாக நிராகரித்து, ஏதேச்சதிகார முறையில் வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை நிறைவேற்றிய மத்திய அரசைக் கண்டித்தும், தேச ஒற்றுமையை, நீடித்த அமைதியை பாதுகாக்க வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், எதிர்வரும் 9 ஆம் திகதி, தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

மக்கள் ஒற்றுமையைப் பாதுகாக்க நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பிரிவு மக்களும் பங்கேற்று ஆதரவு அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக அரசியலில் பரபரப்பு!

## மத்திய அமைச்சர் சீதாராமனை சந்தித்த நாம் தமிழர், அ.தி.மு.க தரப்புகள்







மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் ஆகியோர் அடுத்தடுத்துச் சந்தித்துள்ளமை தமிழ்நாடு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

2026 சட்டசபை தேர்தலில் தனித்தே போட்டியிடுவோம் என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறி வருகிறார்.

இந்த நிலையில், மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் சந்தித்து உள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நிர்மலா சீதாராமன் – சீமான் சந்திப்பு நடந்துள்ளது. தி.மு.க. எதிர்ப்பு வாக்குகளை ஒருங்கிணைக்க பா.ஜ.க. தீவிரம் காட்டி வரும் நிலையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

கூட்டணி இல்லை என கூறி வரும் சீமானை கூட்டணிக்குள் கொண்டு வர பா.ஜ.க. விரும்புகிறது எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக, மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் சந்தித்துப் பேசி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியன்மாருக்கு உணவுப் பொருள்களை வழங்கியது இந்தியா



நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியன்மாருக்கு 442 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்களை இந்தியா வழங்கியுள்ளது.

இரு நிலநடுக்கங்கள் தொடர்ந்து ஏற்பட்டதால் மியன்மாரில் பல நகரங்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்துள்ளன. 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பெரும்பாலான நகரங்களில் பேரழிவு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்கு உதவ இந்தியா சார்பில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவை வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, இந்தியா சார்பில் மியன்மார் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ சுமார் 100 தொன் அளவிலான நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டன.

இந்நிலையில், மியன்மாருக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரண உதவிகளை வழங்க குவாட் நாடுகளான இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் நாடுகள் சேர்ந்து 20 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளன.

இதனிடையே, நேற்று இந்தியா சார்பில் 442 மெட்ரிக் தொன் எடையுடைய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. யாங்கூன் நகரின் தெற்கு கடலோரப் பகுதியில் அமைந்துள்ள திலவா துறைமுகத்தில் இந்த உணவுப் பொருள்கள், யாங்கூன் மாகாண முதல்வரிடம் வழங்கப்பட்டது. இது தொடர்பான தகவல் யாங்கூனில் உள்ள இந்தியத் தூதரகத்தின் எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் புதிய உச்சம் தொட்ட தமிழகம்

## அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்



மத்திய அரசின் புள்ளியியல் ஆய்வறிக்கையின் படி இந்திய பொருளாதார வளர்ச்சியில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி புதிய உச்சத்தை எட்டியுள்ளது என நிதி, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நேற்று ஸ்டார்ட் அப் திட்டத்தில் தொழில் முனைவோர்களை உருவாக்குவதற்காக நடந்த ‘புத்தொழில் களம்’ நிகழ்ச்சியில் நிதி, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழ்நாடு அரசு நிகழாண்டு நிதி நிலை அறிக்கைக்கு முன்பாக வெளியிட்ட நிதிநிலை ஆய்வறிக்கையில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக இருந்தது. மேலும், சிறந்த பொருளாதார நிபுணர்களான ரெங்கராஜன், கே.ஆர்.சண்முகம் ஆகியோர் தங்களது அறிக்கையில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 9.3 சதவீதமாக இருக்கும் என தெரிவித்திருந்தனர்.

தற்போது மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை வெளியிட்ட ஆய்வறிக்கையின்படி நிலைத்த விகிதங்களில் தமிழ்நாட்டின் வளர்ச்சி 9.69 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில், இந்த வளர்ச்சி எட்ட முடியாத வளர்ச்சி ஆகும். தமிழக முதல்வர் கடந்த 4 ஆண்டுகளில் எடுத்த பல்வேறு முயற்சிகளில் வழியாக இந்த வளர்ச்சி கிடைத்துள்ளது. அதன்படி 15.75 லட்சம் கோடி ரூபாவாக இருந்த தமிழகத்தின் பொருளாதாரம் நிகழாண்டு 17.23 லட்சம் கோடி ரூபாவாக உயர இருக்கிறது.

தமிழகத்தில் விவசாயம், உற்பத்தி துறை, சேவை துறை ஆகியவற்றில் இந்த விகிதங்கள் மிகுந்த பங்கு வகித்துள்ளது. எனவே, முதல்வர் கூறியதைப் போன்று, எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு ஒரு ட்ரில்லியன் பொருளாதாரத்தை பெறக்கூடிய அளவிற்கு இந்த வளர்ச்சி விகிதம் உள்ளது.” - என்றார்.









# டொனால்ட் ட்ரம்ப்பிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுப்பு!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கு எதிராக அங்குள்ள முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

50 அமெரிக்க மாநிலங்கள் உட்பட 1,200 இடங்களில் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன.

“கைகளை விடுங்கள்“ என்ற கோஷங்களை எழுப்பி மக்கள் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமூகப் பிரச்சினைகள் முதல் பொருளாதார பிரச்சினைகள் வரை அமெரிக்க ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களில் உள்ள குறைகளை, போராட்டத்தை முன்னெடுத்த மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமெரிக்காவின் புதிய வரித் திட்டம் மற்றும் வெளியுறவுக் கொள்கை என்பவற்றையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் விமர்சித்துள்ளனர்.

# காசா மக்களுக்கு உதவிகளை செய்து வந்த ஊழியர்கள் 15 பேர் இஸ்ரேல் இராணுவத்தினரால் சுட்டுக்கொலை

காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்து வந்த ஊழியர்கள் 15 பேர் இஸ்ரேல் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான காணொலி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மார்ச் 23 ஆம் திகதி காசாவில் உள்ள ராஃபா நகரத்தில் அம்புலன்ஸ்களில் சென்றுகொண்டிருந்த உதவுக் குழுவினர் மீது இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதில் ரெட் கிரசண்ட் ஊழியர்கள் 8 பேர், பாதுகாப்பு அவசரப்பிரிவை சேர்ந்த 6 உறுப்பினர்கள் மற்றும் ஐ.நாவின் ருறேசுயு பிரிவைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் என மொத்தம் 15 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்கள் உதவிக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தே இஸ்ரேல் வேண்டுமென்றே அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கள் வீரர்களை நெருங்கி வந்த வாகனங்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.



இந்நிலையில் நேற்று நடந்த தாக்குதல் தொடர்பான, உயிரிழந்த உதவிக் குழுவில் இருந்த பாலஸ்தீனிய ஊழியர் ஒருவரின் கைபேசியில் இருந்து இந்த காட்சிகள் மீட்கப்பட்டுள்ளன.

நியுயோர்க் டைம்ஸ் தற்போது வெளியிட்டுள்ள அந்த காணொளிலில், ஊழியர்கள் பயணம் செய்த வாகனம், தீயணைப்பு வாகனங்களில் அவசர நிலையை உணர்த்தும் விளக்குகள் எரிந்த நிலையில் இருப்பதும், இஸ்ரேலிய இராணுவத்தினர் வாகனங்களை நோக்கியும் உதவிக்குழுவினரை நோக்கியும் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியது பதிவாகி உள்ளது.

இதன்படி இஸ்ரேல் வேண்டும் என்றே உதவிக்குழுவினர் 15 பேரை படுகொலை செய்துள்ளமை அம்பலமாகியுள்ளது. இதனால் சர்வதேச அளவில் கண்டங்கள் எழுந்து வருகின்றன. இந்த காணொலி குறித்து இஸ்ரேல் இன்னும் எனது விளக்கமும் அளிக்கவில்லை.

பக்கங்கள் - 3

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 06/04/2025

### ஒன்டாரியோவில் சட்டவிரோதமாக வெளிநாட்டவர்களை வேலைக்கு அமர்த்திய நிறுவனங்களுக்கு எதிராக அபராதம்




C2 ▶



# கனடாவில் மார்ச் மாதத்தில் அதிகமான வேலை இழப்பு

அமெரிக்காவின் இறக்கு மதி வரி விதிப்பினால் உரு வான பொருளாதார மந்தநிலை யால் கனடாவின் வேலைவாய்ப் பில் பெரிதும் பாதிப்பு ஏற்பட் டுள்ளது.

ஜனவரி 2022 இற்குப் பிறகு மிகப்பெரிய வேலை இழப்பை சந் தித்துள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடா புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக் கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் மட்டும் 33,000 பேர் வேலைவாய்ப்பு களை இழந்துள்ளனர் என தெரி விக்கப்படுகின்றது.

வேலை வாய்ப்பின்மை விகி தம் பெப்ரவரி மாதம் 6.6 வீதமாக இருந்த நிலையில் மார்ச் மாதம் 6.7 வீதமாக உயர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவுடனான வர்த்தக மோதல் மேலும் தீவிரமாகும் போது,வருங்காலத்தில்பொருளா தார மந்தநிலை ஏற்படக்கூடும் என்பதற்கான முன் அறிவிப்பு என சுளுஆ கனடாவின் பொருளா தார நிபுணர் டு ஙுயென் (Tu Nguyen) தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதத்தில் வர்த்தகத் துறையில் அதிக பணிநீக்கம் ஏற்பட்டது. ஏப்ரல் மாதத்திலும் இது மேலும் அதிகரிக்கலாம் என்று அவர் கூறியுள்ளார்.

# டொரான்டோ கிருஷ்ணர் கோயில் மீது தாக்குதல்: சந்தேகநபர்களின் புகைப்படங்கள் வெளியாகின



கனடாவின் கிரேட்டர் டொரான் டோப் பகுதியில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா பிருந்தாவனம் கோயிலை சேதப்படுத் தியவர்களை பொலிஸார் தேடி வரு கின்றனர்.

அப்பகுதியில் இருந்த சி.சி.டி.வி. காட்சிகளின் அடிப்படையில், சந்தேகிக் கப்படும் இரு ஆண்கள் கோயிலுக்கு செல்வதற்கு முன்பாக, அருகிலிருந்த மதுக்கூடத்துக்கு சென்றமை தெரிய வந் துள்ளது. அவர்கள் கோயிலின் நுழை வாயிலில் சேதம் ஏற்படுத்தியுள்ளனர்.

இருப்பினும், அவர்கள் முகத்தை மறைக்கும்வகையிலான ஹுடி (Hoodie) அணிந்திருந்ததால், அவர் களின் முகம் தெளிவாகத் தெரிய வில்லை.

இந்துக்களுக்கு எதிரான வெறுப்பு குற்றத்துடன் செயல்படும் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களால், கனடாவில் இந்து வழிபாட்டு தலங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன என கனடா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவத்துக்கு கண் டனம் தெரிவித்த இந்து கனேடிய அறக் கட்டளை, இந்து வழிபாட்டு தலங்கள் மீதான தாக்குதல், பல்வேறு சமூகங் களின் நல்லிணக்கத்தின் மீது அச்சு றுத்தலை ஏற்படுத்துவதாகக் சுட்டிக் காட்டியுள்ளது.







# ஒன்டாரியோவில் சட்டவிரோதமாக வெளிநாட்டவர்களை வேலைக்கு அமர்த்திய நிறுவனங்களுக்கு எதிராக அபராதம்

ஒன்டாரியோவில் சட்டவிரோத வேலைவாய்ப்பு வழங்கிய குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட மூன்று நிறுவனங்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கனடிய மத்திய அரசாங்க விசாரணைகளின் பின்னர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணையில் 700 இற்கு மேற்பட்ட அனுமதியில்லா வெளிநாட்டு பிரஜைகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கனடாவின் எல்லை பாதுகாப்பு சேவை (CBSA) கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Ajax, Ont. நகரை தளமாகக் கொண்ட CDA Landscape Services நிறுவனம், அனுமதியில்லாத வெளிநாட்டவர்களை வேலைக்கு அமர்த்திய 20 குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டதாகவும் அதன் அடிப்படையில் குறித்த நிறுவனத்திற்கு 400,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்ற இரண்டு நிறுவனங்களான TDA Landscape Services மற்றும் SDA Services தலா இரண்டு குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அவற்றுக்கு தலா 25,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில், ஒரு வெளிநாட்டை பிரஜையை போதை நிலையில் வாகனம் செலுத்தியதற்காக கைது செய்த போது இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஒன்டாரியோ மற்றும் ரொறன்ரோ பெரும்பாக பகுதிகளில் தங்கியுள்ள சட்டவிரோத வெளிநாட்டு குடியேறிகளின் வலையமைப்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணையின் போது, கனடாவில் வேலை செய்ய அனுமதியில்லாத 700 இற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் கண்டறியப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கண்டறியப்பட்ட பலர் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



# கடை ஒன்றை உடைத்துவிட்டு தப்பியோடிய கொள்ளையர்கள்

## பொலிஸார் தீவிர விசாரணை

கனடாவில் கடை ஒன்றில் புகுந்த கொள்ளையர்கள், டிரக்கை நேரடியாக கடையின் முன்பகுதியின் மீது மோத வைத்து கதவுகளையும் கண்ணாடிகளையும் உடைத்துள்ளனர்.

அதன் பின்னர், அவர்கள் வாகனத்தை கைவிட்டு ஓடிவிட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கடை முற்றாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொள்ளையில் யாரும் காயமடையவில்லை என பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை. சந்தேக நபர்கள் குறித்து எந்த விவரங்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

கொள்ளையர்களைப் பற்றிய தகவல்கள் கிடைத்தால், உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



# புற்றுநோயாளர்களுக்கு புதிய சிகிச்சை முறை

## கண்டுபிடித்தது கனடா

கனேடிய ஆய்வாளர்கள் இளம் புற்றுநோயாளிகளுக்கு புதிய சிகிச்சை முறையொன்றை கண்டுபிடித்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் (B.C) உள்ள ஆய்வாளர்களே இவ்வாறு புதிய சிகிச்சை முறையொன்றை கண்டறிந்துள்ளனர்.

அதன்படி, வழக்கத்துக்கு மாறான சிகிச்சைகளை கண்டுபிடிக்க உதவும் புதிய முறை ஒன்றையே ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

இது தொடர்பில் விளக்கிய B.C குழந்தைகள் மருத்துவமனையின் சிறுவர் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த வைத்தியர் ஜேம்ஸ் லிம், "இந்த முறையில், நோயாளியின் கட்டிகளை கோழி முட்டைகளில் வளர்த்து, அதிலுள்ள புரதங்களை பகுப்பாய்வு செய்யும் செயல்முறை இடம்பெறுகிறது.

நாங்கள் சிறுவனின் கட்டியிலிருந்து ஒரு சிறிய பகுதியை எடுத்து, உருவாக்கும் கோழி முட்டைகளில் நிலைப்படுத்துகிறோம்.

இது கட்டிக்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்கி, அதை வளர விடுகிறது. அதன் பிறகு, நாம் வெவ்வேறு மருந்துகளை பயன்படுத்தி, அதன் எதிர்வினைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த முறையின் மூலம் வழக்கமான சிகிச்சை முறைகளால் குணமடையாத நோயாளிகளுக்கு மாறுபட்ட மருந்துகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்பும் உருவாகிறது." என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அந்த ஆய்வில் பங்குபற்றிய வைத்தியர் பிலிப் லாங்கே, "பொதுவாக புற்றுநோய் நோயாளிகளுக்கு மருத்துவர்கள் வழங்கும் மருந்துகள் சில நேரங்களில் செயல்படாது.

வழக்கமான சிகிச்சை முறைகள் தோல்வியடைந்தால், இந்த புதிய ஆராய்ச்சி அவர்களுக்கு மாற்று வழியைக் காண உதவலாம்" என அவர் கூறியுள்ளார்.

# 40 மில்லியன் டொலர் பரிசை வென்றார் ஒஷாவா முதியவர்

ஒஷாவாவை சேர்ந்த 79 வயதான பெர்னார்ட் வைட் என்ற முதியவர் லொட்டோ மெக்ஸ் Lotto Max Jackpot இல் 40 மில்லியன் டொலர் வென்றுள்ளார்.

இந்த விடயத்தை கேட்டதும், மகிழ்ச்சியில் மிதந்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், அந்த மகிழ்ச்சியை அறிவித்த தருணம் ஒரு நினைவில் நிலைத்திருக்கும் சம்பவமாக அமைந்தது.

பெப்ரவரி 21 ஆம் திகதி நடைபெற்ற Lotto Max சீட்டிழுப்பில் வெற்றி பெற்றது குறித்து அவரது மகள் முதலில் தெரியப்படுத்தியபோது, பெர்னார்ட் தன்




வெற்றியை 40,000 டொலர்கள் என நினைத்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் 10 நிமிடங்கள் கழித்து, அவரது மகள் மீண்டும் கதவை தட்டினாள் வெற்றி பெற்ற தொகை 40 மில்லியன் டொலர் என அறிவிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

நியூஃபவுண்ட்லாந்தை சேர்ந்த பெர்னார்ட், 2009 முதல் Lotto Max டிக்கெட்டுகள் வாங்கி வருகிறார்.

அண்மைக் காலமாக, அவர் தன் மகளுக்கும் தனக்கும் இரண்டு டிக்கெட்டுகள் கொள்வனவு செய்யும் பழக்கத்தை கொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

40 மில்லியன் டொலரை வென்ற பிறகு, பெர்னார்ட் முதலில் 3,000 டொலர் மதிப்புள்ள ஒரு பிரமாண்ட ஆடியோ ஸ்பீக்கர் வாங்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

குடும்பத்தினருடன் பணத்தை பகிர்ந்துகொள்வதே பெரிய கனவு என பெர்னாட் தெரிவித்துள்ளார்.